மாண்புமிகு திரு. எ. அருணாசலம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதித்துறை இசைவிற்கு அனுப்பியபோது 1986–87 ஆம் நிதியாண்டு முடிவு பெறும் தருவாயில் உள்ளதால், அடுத்த நிதியாண்டில் 1987–88-ல் அதை எடுத்துக் கொள்ளலாம் என்று அங்கே சொல்லி இருக்கிறார்கள். ஆகவே 1987–88 இல் அது எடுத்துக்கொள்ளப்படும்.

(முற்பகல் 11–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் அரசு நந்தனார் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி.

646—(வினா எண் 12625) : திரு. சா. ஜெயச்சந்திரன், திரு. கே. ஆர். கணபதி, திரு. கு. தமிழரசன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் அரசு நந்தனார் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் (பாலிடெக்னிக்) தொழில் நுட்ப பாடங்களை பயிற்றுவிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்த உள்ளது?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ''இல்லை'' என்று பதில் சொன்னார்கள். சிதம்பரம் நந்தனார் ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் பாலிடெக்னிக் பயிற்சிக் கூடம் அமைப்பதற்காக அந்தப் பகுதியில் உள்ள நந்தனார் கல்விக் கழகத்திற்குச் சொந்தமாக 100 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதுவும் காட்டுமன்னார் கோயில் தாலுக்கா கள்ளிப்பாடி கிராமத்திலேயே உள்ளது. எனவே அந்த கிராமத்தில் நிலம் இருக்கிற காரணத்தால் அந்த நிலத்தைப் பயன்படுத்தி பாலிடெக்னிக் அமைக்கலாம், எனவே அரசு இதை மீண்டும் ஒருமுறை பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் 1986 ஜூலையில் எழுதிய ஒரு கடிதத்தில் அதைக் குறிப்பிட்டிருக்கிறார்—அதாவது அந்தப் பகுதியில் ஒரு தொழிற்

1987 மே 8]

கூடம் அமைக்க வேண்டும் என்று—அதன் காரணமாகத்தான் நானும் ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநரும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநருக்கு ஒரு செயற்குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. ஆர். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களின் அறிக்கையின்படி அங்கே நந்தனார் கல்விக் கழகம் மூலம் தொழிற் பயிற்சிப்பள்ளிக்கு ஒரு செயற்குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இங்கே கேட்கிறபோது இதே மன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ''நிச்சயமாக அமைக்கப்படும்'' என்று உறுதி தந்தார்கள். மேலும் சுமார் 100 ஏக்கர் நிலமும் அதனுடைய டிரஸ்டும் அங்கே இருக்கிற காரணத்தால் மறைந்த பெரியவர் திரு. சகஜானந்தா அவர்களின் பெயரில் அதை அமைக்க வேண்டுமென்றும் அதையும் இந்த ஆண்டே மறு பரிசீலனை செய்து இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அரசால் அமைக்கப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : அது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. கூடிய விரைவில் நிதி நிலைமைக்கு ஏற்ப ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

ஆ. உடுக்குறியிடாத வினாக்கள்

சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரித்தல்.

1—வினா எண் 104—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சூரிய ஒளியில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தினை ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

விடை—

தமிழ்நாடு அரசு இதுவரை, சேலம், தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் 20 மலைவாழ் கிராமங்களுக்கு (5 கிராமங்கள் 1983–84-லிலும், 15 கிராமங்கள் 1984–85லும்) சூரிய ஒளி